**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP 128/2023**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் வியாழக்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வி | க/பெ.: | லேட்.முத்து |
| கிராமம்: | ஆலங்காடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 40 | முகவரி: | ஆலங்காடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.04.2025.

**முதல் விசாரணை:_**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 27.01.2019 | முதல் தகவல் அறிக்கை | கணிணி நகல் |
| ம.சா.ஆ.2 | 01.02.2019 | பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.3 | -- | என் கணவரின் இறப்பு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.4 | -- | என் கணவரின் வாரிசு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 76 V 7458) | நகல் |
| ம.சா.ஆ.6 | -- | என் திருமணப் பத்திரிக்கை | அசல் |
| ம.சா.ஆ.7 | 12.12.2013 | நானும், இறந்துபோன எனது கணவரும் அ/மி.சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், எட்டுக்குடி திருமணம் செய்துக்கொண்டு செயல் அலுவலர் வழங்கிய திருமணச் சான்று (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | குறியீடு செய்யப்பட்டது.) | |
| ம.சா.ஆ.8 | 24.09.2019 | எனது கணவர் இருசக்கர வாகனம் வாங்கியதற்கான லோன் அக்ரிமெண்ட் பொறுத்து சமரச நடுவர் நியமனம் செய்வது தொடர்பாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | நகல் |

2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்குட்பட்டு ம.சா.ஆ.1– ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி கேட்டுகொண்டதன் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.